1995 மார்ச் 29]

ஒன்றியத்திலிருந்து தொழில்பேட்டை அமைக்க முன்வந்திருக்கிறார்கள். அவர்களை ஊக்குவிக்கும் வகையில் அனைத்துச் சலுகைகளும் அளித்து தொழிற்பேட்டை அமைக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற்பேட்டை அமைக்க வந்தால் கைத்தறி நெசவாளர்களாக இருந்தால் அவர்களுக்குச் சங்கங்கள் இருக்கின்றன. அதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால் அதற்கு என்ன செய்யலாம் என்பதைப் பரிசீலிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *155*, செல்வி கோ. மல்லிகா, மாண்புமிகு பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

155—

சேத்தியாதோப்பில் விட்டுமனைப் பட்டா வழங்குதல்

17469*—செல்வி கோ. மல்லிகா:**

மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேத்தியாதோப்பில் வாழும் முடிதிருத்தும் தொழிலாளர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது வழங்கப்படும்?

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ், பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இது தொடர்பான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) நிலம் கையகப்படுத்தப்பட்டதும் வீட்டுமனைப் பட்டா வழங்கப்படும்.

[*1995 மார்ச் 29*

செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேத்தியாத்தோப்பில் வாழும் முடிதிருத்தும் தொழிலாளர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குவது குறித்த திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்று மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆசியோடு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்ததற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் திட்டம் விரைவில் நிறைவேற்றப்பட வேண்டும் என்று அந்த மக்கள் எதிர்பார்க்கிறார்கள். மக்களின் எதிர்பார்ப்புகளை தாயுள்ளம் கொண்டு நிறைவேற்றி வரும் மாண்புமிகு முதலமைச்சர் தங்கத் தலைவி அவர்களின் ஆட்சிக் காலத்தில் இந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தர அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தச் சவரத் தொழிலாளர்களுக்கு மட்டுமல்ல, வீடற்ற சலவைத் தொழிலாளர்களுக்கும் வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு உத்தேசித்துள்ளது. அதனுடைய அடிப்படையில் 16 நவம்பர் 1994 அன்று பிற்படுத்தப்பட்ட நலத்துறை நில எடுப்பிற்கு உத்தரவிட்டிருக்கிறது. அதாவது அரசு ஆணை போடப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிலம் கையகப்படுத்துகின்ற பணி பல்வேறு கட்டங்களில் இருப்பதாக அறிவித்திருக்கிறார்கள். அவைகளை விரைவுபடுத்தி இந்த நிதியாண்டில் அந்தத் திட்டத்தைச் செயற்படுத்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன் அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு கு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி ஒரு உத்தரவிட்ட பின்னர் இரண்டு ஆண்டுகளுக்குள்ளாக நிலம் கையகப்படுத்தப்பட வேண்டும். அதற்குரிய தீவிர நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 156, திரு. க. அர்ச்சுனன், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்.